# Deposition of Witness

**(Chapter XXXIII Code of Criminal Procedure )**

**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 24/2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : PW1 /LW1 |
| Name | : தணிகைவேல் |
| Father Name/Husband Name | : கோதண்டபாணி |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.05.2022

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கிறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை:-**

நான் தற்போது அரியாங்குப்பத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது Jio Phone கம்பெனியில் சேல்ஸ் மேனாக வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பு நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தேன். இந்த வழக்கின் விபத்தில் இறந்துபோன ஓம்சக்திவேல் எனது நண்பர் ஆவார். 14.08.2013 ம் தேதி நானும் எனது நண்பர் ஓம்சக்திவேலும் என்னுடைய அப்பாச்சி இருசக்கர வாகனத்தில் காரைக்காலுக்கு ரியல் எஸ்டேட் தொழில் சம்மந்தமாக சென்றுவிட்டு திரும்பி கடலூர் மோகினி பாலம் அருகே தெற்கிலிருந்து வடக்கு நோக்கி 06.30 மணியளவில் வந்துக்கொண்டிருந்தபோது அப்போது எதிர் புறத்திலிருந்து வந்த அரசு பேருந்து அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து வண்டியை ஓட்டிக்கொண்டு வந்த என் நண்பர் ஓம்சக்திவேல் மீது மோதியது. நான் வண்டியின் பின்னால் அமர்ந்திருந்தேன். பேருந்து மோதியதால் நான் தூக்கி எறியப்பட்டேன். என் நண்பர் ஓம்சக்திவேலுவுக்கு வயிறு மற்றும் மார்பில் பலத்த அடிப்பட்டு ரத்தக்காயத்துடன் இருந்தார். எங்களை அருகில் இருந்தவர்கள் கடலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மருத்துவமனைக்கு சென்றபோது ஓம்சக்திவேலை பரிசோதித்த மருத்துவர் ஓம்சக்திவேல் இறந்துவிட்டதாக கூறினார். பிறகு இது சம்மந்தமாக நான் திருப்பாப்புலியூர் காவல் நிலையத்தில் அன்றைய தினமே இரவு 09.30 மணியளவில் புகார் அளித்தேன். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

விபத்தில் எனக்கு எதுவும் அடிப்படவில்லை. வண்டியை ஓம்சக்திவேல் தான் ஓட்டி வந்தார். விபத்தானது பேருந்தின் முன்பகுதியில் நடந்தது. விபத்தில் இறந்துபோன நபருக்கு மார்பிலும், வயிற்றிலும் ரத்தக்காயம் இருந்தது. விபத்து நடந்த ரோடு 25 அடி அகலம் கொண்டதாகும். வடக்கிலிருந்து தெற்கு போகும் ரோடு தனியாகவும் தெற்கிலிருந்து வடக்கு போகும் ரோடு தனியாகவும் இரண்டு ரோடுகள் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றுக்கொண்டிருந்தோம். எங்களது இடதுப்பக்க ரோட்டில் விபத்து நடந்தது. போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் வந்தார்கள். நான் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே போலிசார் அங்கு வந்தார்கள். இருசக்கர வாகனத்தின் முன்பகுதி சேதமடைந்தது. 09.30 மணிக்கு நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம். விபத்து 06.30 மணிக்கு நடந்தது. போலிசார் விசாரணையில் பேருந்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சிதம்பரத்திலிருந்து கடலூர் நோக்கி வந்ததாக சொன்னேன். விபத்து நடந்தபோது எங்கள் வாகனத்திற்கு முன்பு எந்த வாகனமும் செல்லவில்லை. போலிசார் விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை எடுத்துச்சென்றார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. விபத்தை நான் பார்க்கவில்லை என்றாலும், விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்துகொண்டு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் பாதிக்கப்பட்ட நபர் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் போலிசார் என்னிடம் இருந்து புகார் வாங்கவில்லை. அந்த புகாரை நான்தான் எழுதினேன். நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு பிறகு தான் வந்து புகார் கொடுத்தேன். உறவினர்கள் யாரும் சம்பவ இடத்திற்கு வரவில்லை. மருத்துவமனைக்கு வந்தார்கள்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.

# Deposition of Witness
## (Chapter XXXIII Code of Criminal Procedure )
## In the Court of Judicial Magistrate No.III Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 24/2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : PW2 /LW2 |
| Name | : பெருமாள் |
| Father Name/Husband Name | : ரவச்சந்திரன் |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.05.2022

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கிறிஞர் ஆஜர்.

**<u>முதன்மை விசாரணை:-</u>**

நான் தற்போது செல்லங்குப்பத்தில் வசித்து வருகிறேன். நான் மீன் பிடிக்கும் வேலை செய்து வருகிறேன். 14.08.2013 ம் தேதி மாலை 06.30 மணியளவில் நானும் என்னுடன் எனது அண்ணன் குமாருடன் கடலூர் மோகினி பாலம் அருகே வந்துக்கொண்டிருந்தபோது எங்களுக்கு முன்னால் பாண்டிச்சேரியை சேர்ந்த இரு நபர்கள் இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தார்கள். அப்போது எதிர் திசையில் வந்த அரசு பேருந்து வேகமாக வந்து இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் மீது மோதியது. அப்போது பின்னால் அமர்ந்திருந்த நபர் தூக்கி எறியப்பட்டார். வண்டியை ஓட்டிக்கொண்டு வந்த நபரான ஓம்சக்திவேல் அரசு பேருந்தின் பின் சக்கரத்தில் மாட்டிக்கொண்டார். அவருக்கு ஒரு சைடு மார்பு பகுதி மற்றும் வயிற்றுப்பகுதி நசுங்கி இருந்தது. உடனே நானும் எனது அண்ணன் குமாரும் ஓடிச்சென்று அவரை வெளியே இழுத்து மற்றும் அடிப்பட்டிருந்த தணிகைவேலுவையும் இருவரையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் கடலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். நான் தணிகைவேலுவிடம் எனது தொலைபேசி எண்ணை கொடுத்து எதாவது உதவி இருந்தால் கூறுங்கள் என்று கூறினேன். அடிப்பட்ட ஓம்சக்திவேல் கடலூர் மருத்துவமனையில் மருத்துவர் பரிசோதித்து இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். மேற்படி வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் பேருந்தில் இருந்து இறங்கி ஓடினார். நான் பார்த்தேன். நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் எதிரிதான் மேற்படி பேருந்தை ஓட்டினாரா என்று எனக்கு சந்தேகமாக உள்ளது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

விபத்து நடந்த ரோடு நான் அடிக்கடி சென்று வரும் பழக்கமான சாலைதான். அது 25 அடி அகலம் கொண்டது. சிதம்பரத்திலிருந்து கடலூர் செல்லும் சாலையில் விபத்து நடந்தது. சாட்சி தணிகைவேல் ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லும்போது மயக்க நிலையில் இருந்தார். தணிகைவேலுவுக்கு எங்கெங்கு காயம் இருந்தது என்று நான் பார்க்கவில்லை. தணிகைவேலுவிற்கு ஆம்புலன்ஸில் வந்தவர்கள் முதலுதவி செய்தார்கள். அடிப்பட்டவர்களை ஆம்புலன்ஸில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பும் வரை சம்பவ இடத்திற்கு போலிசார் வந்தார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. விபத்தில் இறந்துபோனவருக்கு பேருந்தின் வலதுபக்க பின்சக்கரம் ஏறி இருந்தது. நானும் விபத்தில் ஈடுபட்டதாக கூறும் இருசக்கர வாகனமும் 25 அல்லது 30 அடி இடைவெளியில் தான் சென்றுக்கொண்டிருந்தோம். சம்பவ இடத்திற்கு இரவு 07.00 மணியளவில் ஆம்புலன்ஸ் வந்தது. ஆம்புலன்ஸ் வருவதற்குள் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி மருத்துவமனைக்கு அழைத்துச்செல்வதற்கு நான் எதாவது முயற்சி செய்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் 50 நபர்கள் இருந்தார்கள். எந்த காவல் நிலைய போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஓம்சக்திவேலுவும், தணிகைவேலுவும் எனது நண்பர் கடைக்கு வந்திருக்கிறார்கள். நான் அங்கு பார்த்திருக்கிறேன். எனது நண்பர் பெயர் முத்து. முத்து என்பவரின் கடையில் எனது அண்ணன் குமார் வேலை செய்கிறார். முத்து கடைக்கு வந்து செல்லும் நபர்கள் தான் விபத்திற்கு உட்பட்டவர்கள் என்பதால் நான் அவ்வளவு உதவி செய்தேன். இறந்துபோன ஓம்சக்திவேல் நண்பர் முத்து எனக்கும் நண்பர் என்பதால் நான் அவருக்கு அனுசரணையாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.

**Deposition of Witness**

**(Chapter XXXIII Code of Criminal Procedure )**

**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 24/2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : PW3 /LW3 |
| Name | : குமார் |
| Father Name/Husband Name | : நவச்சந்திரன் |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.05.2022

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கிறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை:-**

நான் தற்போது செல்லங்குப்பத்தில் வசித்து வருகிறேன். நான் மீன் பிடிக்கும் வேலை செய்து வருகிறேன். அ.சா.2 எனது தம்பி ஆவார். 2013 ம் வருடம் ஒரு நாள் பாண்டிச்சேரியிலிருந்து எனது உறவினர் ஒருவர் போன் செய்து என்னிடம் அவருக்கு தெரிந்த நண்பர்கள் காரைக்காலுக்கு சென்றுவிட்டு இருசக்கர வாகனத்தில் திரும்பி வந்துக்கொண்டிருந்தபோது இரட்டை ரோடு பிரிவு மோகினி பாலம் அருகே வந்துக்கொண்டிருந்தபோது விபத்து நடந்தது என்றும் உடனே சென்று பாருங்கள் என்றும் சொன்னார். உடனே நானும் எனது தம்பி பெருமாளும் இருசக்கர வாகனத்தில் சென்று மோகினி பாலம் அருகே சென்று விபத்தை பார்த்தோம். அப்போது ஒரு அரசு பேருந்து இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. இருசக்கர வாகனத்தின் பின்னால் இருந்த நபர் கீழே விழுந்துவிட்டார். அவருக்கு எந்த அடியும் படவில்லை. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரான ஓம்சக்திவேல் பேருந்தில் மாட்டி வெளியே இழுத்து வைத்திருந்தார்கள். அவருக்கு மார்பு மற்றும் தலையில் பலத்த அடிப்பட்டிருந்தது. சிறிது நேரம் கழித்து ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மருத்துவமனையில் மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு மேற்படி ஓம்சக்திவேல் இறந்துவிட்டதாக கூறினார்கள். விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுநர் பேருந்தில் இருந்து இறங்கி ஓடினார். அவரை நான் பார்த்தேன். நீதிமன்றத்தில் தற்சமயம் ஆஜராகி இருக்கும் எதிரிதான் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் ஆவார். இந்த வழக்க சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

தற்சமயம் முதல் விசாரணையில் சொன்னதைத்தான் போலிசார் விசாரணையில் சொன்னேன்.விபத்தை எற்படுத்திய பேருந்தின் டிரைவர் இறங்கி ஓடியதை நான் பார்த்ததாக போலிசார் விசாரணையில் நான் சொன்னேனா என்றால் சொன்னேன். மேற்படி விவரத்தை போலிசார் சொல்லிக்கொடுத்து நீதிமன்றத்தில் முதல் முறையாக பேருந்தின் டிரைவர் இறங்கி ஓடினார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பேருந்து விபத்தில் அடிப்பட்டவர் நான் செல்லும்போது பேருந்தின் முன்சக்கரத்தில் மாட்டிக்கொண்டிருந்தார். அங்கிருந்தவர்கள் அவரை இழுத்துக்கொண்டிருந்தார்கள். சாட்சி பெருமாள் நான் வந்துக்கொண்டிருக்கிறேன் நீ வா என்று என்னை முத்து டெய்லர் கடையிலிருந்து சம்பவ இடத்திற்கு அழைத்துச்சென்றார்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.